R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
November 2019



இப்பிரதிகளில் ஒன்றை பெற்றுக் கொள்ள விரும்புவோர் ரூபாய் 100/- மணியாடர் அனுப்பி பெற்றுக்கொள்ளவும் தொடர்புக்கு 9443558041

6379350509

கிறிஸ்துவின் வசனம் வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்தி - Vol.1-5

Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Monday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 நவம்பர் 2019 கனி 12



THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்




**Arjunan in Tamil:**
Every Monday 6:00 - 6:15 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV



**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV

**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV



**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P.




இப்புத்தகங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ரூபாய் 100/– மணியாடர்அனுப்பி பெற்றுக்கொள்ளவும் தொடர்புக்கு
9443558041
6379350509


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**திி வேர்ட் ஆப் கிறைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 231

போட்டியாளர்கள் கவனத்திற்கு,


கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களை விட்டு விலகு என வேதம் போதிக்கிறதா?
2. இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதுமில்லை இது சரியா?
3. தீமோத்தேயுவின் பாட்டி லோவிசாள் சரியா?
4. சவுலும் யோனத்தானும் கழுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தார்களா?
5. நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சிக்க வில்லை என்பது சரியா?
6. கர்த்தர் எந்த தீர்க்கதரிசியின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது அவன் பிழைத்தான்?
7. எவனுடைய அன்பையும், விசுவாசத்தையும் கேள்விப்பட்டு அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்தான்?
8. கர்த்தர் இஸ்ரவேலின் மேல் மிகவும் கோபமடைந்து, அவர்களைத் தம்முடைய முகத்தைவிட்டு அகற்றினார் எந்த கோத்திரமாத்திரமே மீதியாயிற்று?
9. பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி உண்டா?
10. பூமியின் சகல குடிகளே, கர்த்தரைப் பாடி, நாளுக்குநாள் அவருடைய ரட்சிப்பை எப்படி அறிவியுங்கள் என வேதம் சொல்லுகிறது?

## வேதாகம ஆய்வு... 16

## ஆகான்

1. கலங்கப்பண்ணுவோன் என்று அர்த்தம்.
2. இவன் கர்மீயின் மகன் – யோசு.7:17
3. இவன் யூதா வம்சத்தைச் சேர்ந்தவன்.
4. இவன் கட்டளைக்கு விரோதமாக நடந்தான்.
5. இவனும் இவன் குடும்பத்தாரும் கல்லெறியப் பட்டார்கள் – யோசு.7:25
6. இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணினவன் – 1நாளா.2:7
7. கல்லெறியப்பட்ட பள்ளத்தாக்கு ஆகோர் என்றழைக்கப்பட்டது.



Achan

சிறுவர் பகுதி

## பொய்யர் - Liars

**வேதபகுதி:மத்தேயு 4:1-10**



அன்பான தம்பி தங்கைகளே இன்றைய நாளில் பொய் சொல்லுகிறவர்களை குறித்து பார்ப்போம். பொய்யைக்குறித்து வேதாகமம் நமக்கு என்ன சொல்லுகிறது? "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என வெளிப்படுத்தல் 21:8-ம் வசனத்தில் படிக்கிறோம். இந்த வசனப்பகுதியில் அநேக பாவிகளை பட்டியலிட்டு காட்டுகிறது. அதில் குறிப்பாக பொய்யரைக்குறித்தும் சொல்லுகிறது. இவர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களாம். நாம் காலையில் குளிக்கும்போது சற்று அதிகமாக தண்ணீர் சூடேற்றி விட்டால் நம்மால் அதை உடலிலே ஊற்ற முடியவில்லை. அத்தோடு சூடேற்றாத தண்ணீரை கலந்து குளிக்கிறோம். அப்படியிருக்கும்போது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் என்றால் அது எவ்வளவு சூடேற்றப்பட்டதாகவும், அருகாமையிலே கூட செல்லக்கூடாத அளவு அனல் நிறைந்ததாகவும் இருக்கும் அதை நம்மால் எண்ணிப்பார்க்கவே பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தில் பொய்யர்கள் அனைவரும் பங்கடைவார்கள் என பரிசுத்தவேதாகமம் நமக்குப்போதிக்கிறது. பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது என்றால் அது ஒருவனை பயப்படுத்தும்படியாக சும்மா சொல்ல வில்லை. அந்தப்படியே ஆகும். அதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? "நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபே.4:25). நீங்கள் உங்களுடன் படிக்கும் மாணவர்களோடு அல்லது மாணவிகளோடு உண்மையை பேசுகிறீர்களா? அல்லது சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் என்று பொய்சொல்லிக்கொண்டே இருக்கிறீர்களா, கடுகளவும் பொய் சொல்லாதிருக்கப்பழகுங்கள். தேவன் ஒரு பொய்யும் சொல்லாதவர். அவரைப்போல நாமும் பொய் சொல்லாதிருக்கவேண்டும்.

நாம் பொய்சொல்லி வாழவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் பிதாவாகிய தேவன் நமக்கு பூமியிலே சகலத்தையும் நேர்த்தியாக படைத்திருக்கிறார். பூமியிலே நாம் சரியானபடி பாடுபடும்போது அது நமக்கு நலமானதைக் கொடுக்கும். "பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும்" என நீதிமொழிகள் 21:6-ல் வாசிக்கிறோம். நீங்கள் அப்பா அம்மாவிடம் ஏதாவது ஒரு பொய் சொல்லி காரியத்தை சாதிக்க நினைக்காதிருங்கள். அது உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்காது. "உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" என்று மத்தேயு5:37-ல் நமது ஆண்டவராகிய இயேசு சொன்ன வசனத்தை நினைவுகூருங்கள்.

### மனப்பாட வசனம்

**"அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" – 1யோவான்2:4**

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 நவம்பர் -2019 கனி - 12

ஆசிரியருரை

## ஒருவரும் கெட்டுப்போக விரும்பாமல்...
## Not Willing Any One To Perish...



**ப**ரிசுத்த வேதம் சொல்லுகிறது "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). கர்த்தருடைய வருகை தாமதமாவதற்கு காரணம் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென தாமதிக்கிறார். அவருடைய நீடிய பொறுமையை இரட்சிப்பு என்று நாம் நினைக்கவேண்டும். ஒரு வீட்டில் உள்ள நபர்கள் வேறுஇடத்திற்கு குடிபெயர்வார்களானால் ஒரு நபரை மட்டும் விட்டு விட்டு மற்றவர்கள் சென்று விடுவார்களா? அந்த நபரையும் அழைத்துக் கொண்டு போவார்கள் அல்லவா? அதைப்போல இவ்வுலகத்தில் உள்ள ஒருவரையும் பிதாவாகிய தேவன் இழக்க விரும்பவில்லை. எல்லோரும் காப்பாற்றப்படவேண்டுமென விரும்புகிறார். ஆகையால் கர்த்தருடைய வருகை தாமதிக்கிறது. இதை பயன்படுத்தி மனந்திரும்பாதவர்கள் உடனே கர்த்தருடைய வசனத்தை விசுவாசித்து மனந்திரும்வேண்டியது அவசியமாயிருக்கிறது. இன்னும் அநேகர் மனந்திரும்பவில்லை. அவருடைய வருகை சமீபத்தில் இருக்காது என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. அவருடைய வருகை சடுதியில் இருக்கலாம். ஆகையால் இனியும் காலம் கடத்தாது உங்களுடைய பாவமன்னிப்புக்காக மனந்திரும்புங்கள்.

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி.1:1,2). நம்முடைய பிதாக்களோடு தேவன் பேசும்போது தீர்க்கதரிசிகளைக் கொண்டு பேசிவந்தார். இக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்மோடு பேசிவருகிறார். ஆகையால் ஆண்டவருடைய வசனங்களுக்கு செவிகொடுங்கள். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று கர்த்தர் சொல்லுகிறார். இன்றைக்கு நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் அவர் சிந்திய இரத்தத்தின் மூலமாகவும் பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளுகிறோம். இரத்தம்

சிந்துதலில்லாமல் மனிதனுக்கு பாவமன்னிப்பு இல்லை. நம்முடைய பாவத்தைப் போக்கும் பலியாக இயேசு சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்தினார். ஆகையால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். நோவா காலத்தில் தேவன் நோவாவைக் கொண்டு அவனுடைய குடும்பத்தை இரட்சித்தார். "பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார்" என பேதுரு சொல்லுகிறார் (2பேது.2:5). இக் கடைசிநாட்களில் தேவன் இயேசுவைக்கொண்டு நம்மை இரட்சிக்கும்படியாக திட்டம் கொண்டுள்ளார். ஆகையால் மனந்திரும்புங்கள். இவ்வுலகில் ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல.

மேலும் பேதுரு சொல்லும்போது; "நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்"(2பேது.2:8,9). நாமும் கூட இவ்வுலகத்தில் இருக்கிற அக்கிரமகிரியைகளைக் கண்டு நாள்தோறும் வாதிக்கப்படுகிறோம். அதைப்போல லோத்தும் சோதோம் கோமோரா ஜனங்கள் மத்தியில் வாதிக்கப்பட்டார். அவர்களுடைய அக்கிரமம் தேவசமுகத்தை எட்டினது. ஆகையால் அந்தப்பட்டணங்களில் உள்ள லோத்தையும் அவனுடைய குடும்பத்தாரையும் காப்பாற்றும்படியாக தேவதூதர்களை அனுப்பி அவர்களை இரட்சித்தார். அதைப்போல தேவபக்தியுள்ளவர்களை இக்காலகட்டத்திலும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளுங்கள். மனந்திரும்பாமல் இருக்கும் அக்கிரமக்காரரையோ தேவன் அவியாத அக்கினியில் பங்கடையும்படியாக ஒப்புக்கொடுப்பார். ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஆகையால் "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது" (1யோவா.4:9). தேவன் முதலாவது நம்மீது அன்பு செலுத்தி தம்முடைய குமாரனை பலியாக ஒப்புக்கொடுத்து நாம் பிழைக்கும்படி செய்தார். இது எப்பேர்பட்ட அன்பு. தம்முடைய குமாரனுடைய ஜீவனையே கொடுத்தார். இதைக்காட்டிலும் மேலான அன்பு ஒன்றுமில்லை. "அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னனப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார்" (1யோவா.5:20). தகப்பனை அறியாத பிள்ளைகளாக நாம் இருந்தோம். அப்படிப்பட்ட நிலையில் நமக்கு சத்தியமுள்ள தேவனை வெளிப்படுத்தியவர், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. நாம் இப்பொழுது அவரை அறிந்து அவருடைய குமாரனுக்குள்ளாக இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நமது இரட்சகரும் நித்தியஜீவனுமாயிருக்கிறார். "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பிலே நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1யோவா.4;16). இயற்கையாகவே நாம் தேவனை விசுவாசிக்கவில்லை. தேவன் தம்முடைய குமாரனை நமக்காக கொடுத்ததினாலே



## தேவனுடைய வார்த்தை சுருக்கிக் கூறப்பட்டுள்ளது

God`s Word Summarized




இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது
தேவனுடைய மனதை,
மனிதனுடைய நிலையை,
இரட்சிப்பின் வழியை,
விசுவாசிகளின் மகிழ்ச்சியை

இதனுடைய கோட்பாடுகள்
பரிசுத்தமானவை,
இதனுடைய கற்பனைகள்
பரிசுத்தமானவை,
இதனுடைய வரலாறுகள்
உண்மையானவை,
இதனுடைய தீர்ப்புகள் மாறாதவை

இதை வாசி ஞானமடைய,
இதை விசுவாசி இரட்சிப்படைய,
இதை பயிற்சிசெய் பரிசுத்தமடைய.

இது கொண்டுள்ளவைகள்:
ஒளி உன்னை வழிநடத்த,
போஜனம் உன்னை போஷிக்க,
ஆறுதல் உன்னை உற்சாகப்படுத்த.

இது வழிப்போக்கனின் வரைபடம்,
புனித பயணியின் ஆதாரம்,
விமானியின் திசைகாட்டி,
படைவீரனின் வாள்,
கிறிஸ்தவனின் கதாபாத்திரம்
இங்கே
பரதீசு முன்நிலையில்
வைக்கப்பட்டுள்ளது,
பரலோகம் திறக்கப்பட்டுள்ளது,
நகரத்தின் கதவுகள்
மூடப்பட்டிருக்கவில்லை.

கிறிஸ்து இதனுடைய மிகப்பெரிய
சாராம்சம்,
நம்முடைய நன்மை இதனுடைய
வரிவடிவம்
தேவனுடைய மகிமை இதனுடைய
முடிவு

இது

மனதை நிரப்பும்,
இதயத்தை ஆளும்,
கால்களை நடத்தும்

இதை வாசி
நிதானமாக,
அடிக்கடி,
ஜெபத்தோடு.

இது
ஒரு செல்வத்தின் சுரங்கம்,
ஒரு மகிமையின் பரதீசு,
ஒரு இனிமையின் நதி.

இது
வாழ்வில் உனக்குக்
கொடுக்கப்பட்டுள்ளது,
நியாயத்தீர்ப்பிலே திறக்கப்படும்,
என்றென்றும் நினைக்கப்படும்.

இது
சம்பந்தப்படுகிறது மாபெரிய
பொறுப்போடு
வெகுமதியளிக்கிறது மிகப்பெரிய
உழைப்பிற்கு
கண்டிக்கிறது இதன்
பரிசுத்தக்காரியங்களை
அசட்டைப் பண்ணுகிறவர்களை.

-The Voice of Truth International.



| | |
|---|---|
| 41. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 42. Mrs. புளோரா சுந்தர் | - மதுரை |
| 43. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 44. Mrs. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 45. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 46. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 47. S. ஜாய்சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 48. Mrs. தேவதாதேவப்பிரியம் | - சென்னை |
| 49. E. ஜாய்ஸ்ஹெலன்புனிதா | - சென்னை |
| 50. J.S. ஜெயா மேரித்தாய் | - திண்டுக்கல் |
| 51. G. பூங்கோதை | - கோபி |
| 52. S.V. தனபால் | - கொடுமுடி |
| 53. B. ஞானதீபம் ஜெபராஜ் | - திருநெல்வேலி |
| 54. Mrs. ரூபி ஜெய சேகர் | - கலுங்குவிளை |
| 55. S. கில்பர்ட் | - வாணியம்பாடி |
| 56. B. ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 57. M. முருகன் | - பிலிக்கல்பாளை |
| 58. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |

**"உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப் படுங்கள்" - லூக்கா 10:20**

| | |
|---|---|
| 41. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 42. E. ஜாய் ஹெலன் புனிதா | - சென்னை |
| 43. Mrs. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 44. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 45. Mrs. ஜெபாமோசஸ் | - தூத்துக்குடி |
| 46. J. இளவரசி ஜோபிதா | - கோவை |
| 47. G. பூங்கோதை | - கோபி |
| 48. Mrs. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 49. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 50. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 51. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 52. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 53. M. முருகன் | - பிலிக்கல்பாளை |
| 54. T. ஏஞ்சலின்நேசமலர் | - சாந்தாபுரம் |
| 55. S. தங்கம் | - சாந்தாபுரம் |
| 56. Mrs. ஃபுளோரா எழில் | - ஆம்பூர் |
| 57. J. விக்டர் சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 58. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 59. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 60. S.A. சாமுவேல் | - பரமத்தி |
| 61. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |

சந்தா செலுத்தாதவர்கள் செலுத்தி இவ்விதழை தொடர்ந்து பெற்றுக்கொள்ளுங்கள் நன்றி

# ஆசிரியர் கடிதம்

9443558041
6379350509

*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாசகர் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.*

*நமது மாத இதழை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். புதிய விலாசங்களை எழுதி அனுப்புங்கள். 100 கிறிஸ்தவ நண்பர்களுடைய விலாசங்களை அனுப்பி அழகிய முழுவேதாகமம் பெற்றுக்கொள்ளுங்கள். புது பெலனை தேவன் தந்தருளும்படியாக அவருடைய சமுகத்தில் காத்திருங்கள். எதை நினைத்தும் சோர்ந்து போகாதிருங்கள். "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று அவர் சொல்லியிருக்கிறாரே எபி.13:5 எனவே உங்களுடைய நம்பிக்கையை பூரணமாக தேவன் மீது வைத்து காத்திருங்கள்.*

*மேலும் உங்களுக்கு வேதபாடங்கள் படிக்க விருப்பம் இருந்தால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். அஞ்சல்வழி வேதபாடங்களை அனுப்பிக்கொடுப்போம்.*

*எங்களோடு இணைந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய கர்த்தருடைய ஊழியர்களை அழைக்கிறோம். 2020-ம் ஆண்டு நாம் செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருக்கிறது. ஜெபியுங்கள்.*



***அன்புடன்,***
***ஆசிரியர்***

ஜெபியுங்கள்



- உலக அமைதிக்காக...
- சமாதானம் வீட்டிலும், நாட்டிலும், தேசத்திலும் உண்டாக...
- இராஜ்யத்தின் சுவிசேஷம் எல்லா இடங்களிலும் சென்றடைய...
- இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நற்செய்தி இதழுக்காக...
- நம் தேசத்திற்காகவும் அனைத்து அரசியல் தலைவர்களுக்காகவும்...



நாம் விசுவாசிக்கிறோம். அதினாலே நாம் தேவனில் அன்புள்ளவர்களாயிருக்கிறோம். அவருடைய குமாரனிடத்திலும் அன்புள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் தேவன் எப்பொழுதும் அன்புள்ளவராகவே இருக்கிறார். அன்புள்ள எவனையும் அவர் நேசிக்கிறார். அப்படிப்பட்டவர்களோடு அவர் வாசம் பண்ணுகிறார். நீங்கள் தேவனிடத்தில் அன்புள்ளவர்களாக இருக்கின்றீர்களா? அப்படி இல்லையென்றால் அவரில் அன்புகூருங்கள். எல்லாம் ஒழிந்துபோகும் ஆனால் அன்பு ஒருக்காலும் ஒழியாது. அந்த அன்பை பற்றிக் கொள்ளும்போது நாமும் ஒழியாமலிருப்போம்.

ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்பது தேவனுடைய விருப்பமல்லவா ஆகையால் தீமையினின்று அவர்களை இரட்சிக்கிறார். "கர்த்தரோ, உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்"என தெசலோனிக்கேயர் புத்தகத்தில் படிக்கிறோம் (2தெச.3:3). தீமை நமக்கு வந்துவிட்டால் உற்ற நண்பனும் ஓடிவிடுவான். உறவினர்களும் கண்டுகொள்ளமாட்டார்கள். அவனுக்கு வந்தது நமக்கும் வந்துவிடும் என்று விலகிபோய்விடுவார்கள். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் நாம் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காக எல்லாவிதமான தீமையினின்றும் நம்மைக் காக்கவல்லவராயிருக்கிறார். ஆகையால் அவருடைய அன்பு மேலானது எனக் காண்கிறோம். இந்த அன்பை அறிந்து விசுவாசியுங்கள். கடும்நோய்க்கு உட்பட்டுவிட்டால் எந்த மருத்துவரும் கைவிட்டுவிடுவார்கள். ஆனால் பரம வைத்தியர் ஒருபோதும் கைவிடார். அதிலிருந்து அவர் சுகப்படுத்துகிறார். அப்படிப்பட்ட கர்த்தரை நாம் தெய்வமாக கொண்டிருக்கிறோம். "மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்துவருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக்குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம்" என்று பவுல் எழுதுகிறார் (2தெச.3:4). தேவன் எதிர்பார்க்கிற காரியங்களை நாம் செய்யவேண்டும். அப்பொழுது அவர் நம்மை இரட்சிக்கமுடியும். பாவத்திலே நிலைத்திருக்கும் ஒருவனை அவர் இரட்சிக்கமுடியாது அவன் மனந்திரும்பி பாவத்தை விட்டுவிடும்போது கர்த்தரால் காப்பாற்றப்படுகிறான்.

"கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக" (2தெச.3:5). இன்றைக்கு அநேகர் தங்களுடைய நாட்களை கெடுத்துக்கொள்ளுகிறார்கள். பொறுமையை இழந்து பலவிதமான உபாய தந்திரங்களாலே மாட்டிக்கொள்ளுகிறார்கள். சிலர் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். உங்களுடைய இருதயம் தேவனுடைய அன்புக்கு நேராக வழிநடத்தப்படும்போது நீங்கள் ஏமாற்றப்படுவது தவிர்க்கப்படும். கர்த்தர் ஒருவரையும் வஞ்சிக்கிறவர் அல்ல. மனிதன் பல வழிகளில் வஞ்சிக்கப்படுகிறான். மற்றவர்களையும் வஞ்சிக்கிறான். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் நாம் கெட்டுப்போகாமல் அவருடைய அன்பில் ஊன்ற கட்டப்படவேண்டுமென விரும்புகிறார். ஆகையால் கர்த்தர் அவருடைய அன்புக்கு நேராக நம்மை வழிநடத்துகிறார். மேலும் கிறிஸ்துவின் பொறுமையைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். அவர் வையப்படும்போது பயமுறுத்தாமலும் பாடுபடும்போது ஒருவரையும் துன்புறுத்தாமலும் நியாயமாய் தீர்ப்புச் செய்கிறவருக்கு தம்மை ஒப்புவித்தார். வாய்திறவாத ஆட்டைப்போல இருந்தார். அவருடைய சத்தம் வீதிகளில் கேட்கப்படவில்லை. அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது உன்னை நீயே இரட்சித்துக்கொள் என்று சொல்லி அவரை இகழ்ந்தார்கள். அவர்

அவர்களுக்கு பிரதியுத்தரமாக ஒருவார்த்தையும் சொல்லவில்லை. மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள திராணியில்லையென்றார்கள். இத்தனை வார்த்தைகளையும் அவர் பொறுமையோடிருந்து சகித்தார். நாம் ஒவ்வொருமுறையும் நமக்கு பாடுகள் வரும்போது கிறிஸ்துவையே நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் பவுல் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக என்று எழுதுகிறார். இப்படி தங்களை நடத்தும்படியாக ஒப்புக்கொடுக்காத அநேகர் தங்களுடைய சிந்தையில் வீணராய் போய்விடுகிறார்கள். உலகத்தில் வரும் பாடுகளையும் பிரச்சனைகளையும் தங்களால் மேற்கொள்ள முடியாமற்போய்விடுகிறார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. நீ தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவன். ஆகையால் தேவன் உன்னை அதிகமாக நேசிக்கிறார். மற்றவர்கள் நீ எப்பொழுது கெட்டுப்போவாய் என எதிர்பார்த்து காத்திருப்பார்கள். மனிதனுக்குள்ளாக பொறாமை குடிகொண்டிருக்கும்போது இதை எதிர்பார்த்து காத்திருப்பான். ஆனால் நீ மனந்திரும்பி இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். உன் காலத்துக்கு முன்னே நீ ஏன் மரணத்தை சந்திக்கவேண்டும். மனிதன் தேவனோடு என்றென்றுமாக வாழும்படியாக படைக்கப்பட்டவன். உனக்காக மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவரைப்போல நீயும் அவரோடு வீற்றிருந்து நித்தியத்தில் நித்திய மகிழ்ச்சியை கண்டடைய உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடு. நீ நம்புகிற அல்லது உயிருக்கு உயிராக நேசிக்கிற நண்பனோ, உறவினர்களோ உன்னை ஒரு நாள் கைவிடுவார்கள் என்பதை நீ மறந்துபோகாதே! ஆனால் என்றும் உன்னை கைவிடாது நேசிக்கும் கர்த்தர் உன்னுடைய மனந்திரும்புதலை எதிர்நோக்கியிருக்கிறார். இன்றே உன்னை முழுவதுமாக ஒப்புக்கொடு.

**சத்தியத்தை நாம் விசுவாசிக்கும்போது தேவனால் தெரிந்து கொள்ளப்படுவோமா?**

ஆம், தேவன் சத்தியபரர் சத்தியத்தை விசுவாசிக்கும் ஒவ்வொருவரையும் அவர் நேசிக்கிறார். "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் ஆண்டவர் இயேசு. சத்தியத்தை ஒருவர் அறியாதிருக்கும்போது விடுதலையடைய முடியாது. உண்மையாய் நடக்கிறவர்கள் தேவனுக்கு பிரியமானவர்கள். அப்படிப்பட்டவர்களை அவர் தெரிந்துகொண்டு அவர்களிடத்திலே அநேக பொறுப்புகளை கொடுக்கிறார். பவுல் தெசலோனிக்கேய சபையாருக்கு எழுதும்போது; "கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளியாயிருக்கிறோம்" என்கிறார் (2தெச.2:13). நாம் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிக்கப்படுகிறோம். இன்றைக்கு அநேகர் நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டீர்களா? என்று இயேசுவை நோக்கி வந்தவர்களைப் பார்த்து கேட்கிறார்கள். அவர்கள் இன்னும் பரிசுத்தமாக்கப்படவில்லை, சத்தியத்தை அறியவில்லை, அவர்கள் எப்படி ஆவியில் பரிசுத்தமடைய முடியும். கர்த்தருடைய சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படாதவன் ஆவியில் பரிசுத்தமாக்கப்படமுடியாது. அதைப்போல சத்தியத்தை விசுவாசியாமல் இரட்சிக்கப்படமுடியாது. நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட இக்காரியங்களை உங்களுடைய வாழ்க்கையில் செயல்படுத்துங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## வேத அறிவுப்போட்டி 228–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. சாத்தானை | - வெளி.12:11 |
| 2. ஏசா | - ஒப.1:7 |
| 3. வீட்டெஜமான் | - மத்.20:15 |
| 4. நினிவே | - யோனா 3:10 |
| 5. தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் | - மாற்.13:22 |
| 6. கோபம் | - மீகா 7:18 |
| 7. பதினெட்டுப்பேர் | - லூக்.13:4 |
| 8. சர்வசங்காரம்பண்ணுவார் | - நாகூம் 1:8 |
| 9. யூதர்கள் | - யோவா.8:59 |
| 10. செம்மையானதல்ல | - ஆபகூ.2:4 |

## வேத அறிவுப்போட்டி 229–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. பேலிக்ஸ் | - அப்.24:24 |
| 2. சகரியா | - சகரி.9:9 |
| 3. அப்படியல்ல | - ரோம.3:31 |
| 4. மல்கியா | - மல்.3:18 |
| 5. பவுல் | - 1கொரி.9:19 |
| 6. யோசேப்பு | - ஆதி.47:21 |
| 7. பவுல் | - 2கொரி.4:11 |
| 8. பெசலெயேலை | - யாத்.35:30 |
| 9. கலாத்திய சபைக்கு | - கலா.3:3 |
| 10. உடன்படவேண்டாம் | - லேவி.19:16 |

## வேத அறிவுப்போட்டி எண் 228ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 2. P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 3. E. அதிசயம் | - பனைகுடி |
| 4. S. செல்வராஜ்சாலமோன் | - வள்ளியூர் |
| 5. J. ஆலிவ் | - கோவை |
| 6. Mrs. ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 7. J. விக்டர் சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 8. S. தங்கம் | - சாந்தாபுரம் |
| 9. T. ஏஞ்சலின் நேசமலர் | - சாந்தாபுரம் |
| 10. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 11. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 12. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 13. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 14. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 15. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 16. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 17. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 18. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 19. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 20. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 21. Mrs. இளவரசி ஜோபிதா | - கோவை |
| 22. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 23. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 24. M. ராஜம்மாள் மனோகரன் | - சென்னை |
| 25. Mrs. ஜாய் மேத்யூ | - வி.கே.புரம் |
| 26. Mrs. ரூத் ஜெயராணி | - பெருமாள்புரம் |
| 27. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 28. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 29. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுகை |
| 30. Mrs. அல்லிராணி காட்வின் | - சென்னை |
| 31. Mrs. ஏஞ்சலின்நேசமலர் | - கன்னியாகுமரி |
| 32. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 33. Mrs. இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 34. Mrs. ஃபுளோராஎழில் | - ஆம்பூர் |
| 35. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 36. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 37. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 38. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 39. K. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 40. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |

## வேத அறிவுப்போட்டி எண் 229ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 2. Mrs. ஞானதீபம் ஜெபராஜ் | - திருநெல்வேலி |
| 3. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 4. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 5. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 6. Mrs. ஜாய் மேத்யூ | - வி.கே.புரம் |
| 7. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 8. P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 9. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 10. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 11. E. அதிசயம் | - விருதுநகர் |
| 12. Mrs. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 13. Mrs. ரூத் ஜெயராணி | - பெருமாள்புரம் |
| 14. J. ஜாய் கமலம் | - நாசரேத் |
| 15. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 16. T. ராஜாத்தி | - கோம்பை |
| 17. A. நத்தானியேல் | - திருவள்ளூர் |
| 18. S. சாந்தாகுமாரி | - நாசரேத் |
| 19. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 20. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 21. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 22. ரூபி ஜெய சேகர் | - கலுங்குவிளை |
| 23. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 24. Tmt. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 25. S. செல்வராஜ் சாலமோன் | - வள்ளியூர் |
| 26. J. ஆலிவ் | - கோவை |
| 27. Sis. இராஜம்மாள் | - சென்னை |
| 28. S.V. தனபால் | - கொடுமுடி |
| 29. S. ஜாய் சந்திரா காந்தா | - நெல்லூர் |
| 30. J.S. ஜெயா மேரிதாய் | - திண்டுக்கல் |
| 31. Mrs. ஃபிராங்கலினா ஜான் | - ஊட்டி |
| 32. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 33. Mrs. தேவி ராஜசிங் | - திருப்பூர் |
| 34. Mrs. அல்லிராணி காட்வின் | - சென்னை |
| 35. Mrs. தேவதா தேவப்பிரியம் | - சென்னை |
| 36. Mrs. மேரி ஜெயக்குமார் | - மதுரை |
| 37. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 38. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 39. Mrs. ஜெயமணி ராஜம்மாள் | - கடலூர் |
| 40. Mrs. இந்திராஜெபக்கனி | - நாசரேத் |

**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி - 14***

**14. சபை ஆராதனையில் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தலாமா?**

1. நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் ☐ வசன ஆதாரம் ------------------------------------------

2. புல்லாங்குழல், சுரமண்டலம் முதலியவைகள் உயிர் உள்ள கருவிகள் ☐ வசன ஆதாரம்------------------------------------------

3. அப்போஸ்தலர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப்பாடினார்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------------

4. வாத்திய கருவி இல்லாததினால் கைதட்டிப் பாடினார்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------------

5. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு பாடவேண்டும் ☐ வசன ஆதாரம் ------------------------------------------

6. சங்கீதம் என்றாலே இசை சம்பந்தப்பட்டது ☐ வசன ஆதாரம்- ------------------------------------------

7. இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடவேண்டும் ☐ வசன ஆதாரம்- ------------------------------------------

8. தாவீதைப்போல நடனமாடிப் பாடுங்கள் ☐ வசன ஆதாரம் - ------------------------------------------

9. அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை ... தேவனுக்கு செலுத்தக்கடவோம் ☐ வசன ஆதாரம்- ------------------------------------------

10. உதடுகளினால் பாடுவதுபோல வாத்தியக் கருவியுடன் தேவனைத் துதித்துப்பாடுவது தவறில்லை ☐ வசன ஆதாரம் ------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**



# கர்த்தருடைய இராப்போஜனத்தின் துவக்கம்

## The Institution of the Lord`s Supper

*-J.C.Choate*



**க**ர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பே, கர்த்தர் தம்முடைய நினைவு கூருதலாகிய இராப்போஜனத்தை துவக்கினார். கர்த்தருடைய ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த போது சங்காரகாரன் அவர்களை சங்கரிக்காமல் கடந்துபோன நாளை நினைவு கூரும்படி வருடத்திற்கு ஒரு முறை பஸ்கா பண்டிகையை அநுஷ்டித்து வந்த அந்த பஸ்காபண்டிகைக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்குப் பயணம் செய்தனர். இயேசு உலகமெங்குமுள்ள தம்முடைய ஜனங்களால் தம்முடைய சரீரம் மற்றும் தம்முடைய இரத்தபலியின் நினைவாக வாரந்தோறும் நினைவு போஜனமாக மாறப்போகிற தம்முடைய இராப்போஜனப் பந்தியை ஆரம்பிக்க இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். “அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு ,சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப்பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மத்.26:26-29).

அந்த சமயத்தில் கர்த்தர் இன்னும் சிலுவையில் மரிக்கவில்லை என்பதை தயவுசெய்து கவனியுங்கள், ஆனால் அவர் தம்முடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தம்மை நினைவு கூருவதை அநுஷ்டிக்கும்படிக்கு இதை ஆரம்பித்தார். அத்தோடு கூட அவர் தாம் அவர்களோடேகூட தம்முடைய பிதாவின் ராஜ்யத்திலே பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்றும் குறிப்பிட்டார். அந்த ராஜ்யம் அல்லது சபை இன்னும் வராதிருந்தது, ஆனால் அது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வருவதாக இருந்தது. அப்போஸ்தலர் 2ல் குறிப்பிட்டுள்ளபடி பெந்தெகொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, சீஷர்கள் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொண்டு அந்த நாளை தொடர்ந்து அநுஷ்டித்து வருகிறபோது அவர் தம்முடைய ஜனங்களோடு இருப்பார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, “ஜீவ அப்பம் நானே . உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன்

என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும்,என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந் திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்" (யோவா.6:48-58).

தொடர்ந்து கூறும் கூற்று முழுவதிலும் இயேசு தம்முடைய வெளிப்படையான சரீரத்தைப்புசிப்பது குறித்தும் தம்முடைய வெளிப்படையான இரத்தத்தை பானம்பண்ணுவது குறித்தும் பேசிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர் ஆவிக்குரிய காரியங்களை, அதாவது தம்முடைய சரீரத்திற்கு நினைவாக பிட்கப்படுகிற அப்பத்தைக் குறித்தும் தம்முடைய இரத்தினாலாகிய பாத்திரத்தைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தார். சிலர் இன்று அப்பத்தில் பங்கு கொள்ளும் போது, அது இயேசுவினுடைய வெளிப்படையான மாம்சமாக மாறுகிறது என்றும், பாத்திரத்தில் அல்லது திராட்சரசத்தில் பங்கு கொள்ளும் போது அது இயேசுவின் உண்மையான இரத்தமாக மாறுகிறது என்றும் விசுவாசிக்கின்றனர். நிச்சயமாகவே இது உண்மையல்ல. இயேசு தம்முடைய ஜனங்கள் மாம்சத்தைத் தின்னும் பழக்கத்தில் ஈடுபடும்படி தம்முடைய இராப்போஜனத்தைப் பயன்படுத்தமாட்டார்.

இப்போது கிறிஸ்து சிலுவையில் மரித்தவராக, அடக்கம் செய்யப்பட்டவராக மேலும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவராக இருக்கிறார் மற்றும் இராஜ்யம் அல்லது சபையானது அவர் திட்டமிட்டபடி ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களாகிய, அவருடைய குடும்பமாகிய, சபை அங்கத்தினராகிய, நாம் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறவர்களாகயிருக்கிறோம். பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் துரோவா பட்டணத்திலே அப்பம் பிட்கும்படி கூடிவந்திருந்த நிகழ்ச்சியை நாம் மாதிரியாகக் கொண்டிருக்கிறோம். வேதம், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்"(அப்.20:7) எனக் கூறுகிறது. வேதாகம பண்டிதர்கள் "அப்பம்




## பொது அறிவு வினா விடை

1. கரைவெட்டி பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம் எது? அ) அரியலூர் ஆ) திருவாரூர் இ) காஞ்சிபுரம்
2. பாலாறு உருவாகும் மாநிலம் எது?
அ) தமிழ் நாடு ஆ) கர்நாடகா இ) ஆந்திரா
3. உலகிலேயே முதல் தரமான கருப்புக் கருங்கல் கிடைக்கும் மலை எது?
அ) ஆனைமலை ஆ) பச்சைமலை இ) கொல்லி மலை
4. மெட்ராஸ் மாகாணத்திற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டக்கோரியவர் யார்?
அ) கோபன்னா ஆ) கலியாண சுந்தரனார் இ) சங்கரலீங்கனார்
5. உலகில் குங்குமப் பூ உற்பத்தியில் முதல் இடம் வகிக்கும் நாடு எது?
அ) இந்தியா ஆ) ஸ்பெயின் இ) பிரேசில்

*விடைகள்*
*1. அரியலூர்*
*2. கர்நாடகா*
*3. பச்சைமலை*
*4. சங்கரலீங்கனார்*
*5. ஸ்பெயின்*

## நாம் உண்டாக்கப்பட்டோம்
## We Were Created



- தேவனை ஆராதிப்பதற்கு...
- தேவனுக்கு மகிமை செலுத்தும்படிக்கு...
- தேவனைத் தொழுதுகொள்ளும்படிக்கு...
- தேவனை அறிந்து கொள்ளும்படிக்கு...
- தேவனிடத்தில் ஐக்கியம் கொள்ளும்படிக்கு...
- தேவனோடு கூடி நடப்பதற்கு...
- தேவனோடு நித்திய நித்தியமாக வாழும்படிக்கு...

## பறவைகள் பல விதம்

**தெரிந்துகொள்வோம்**



- பறவைகளில் சுமார் 8320 வகைகள் உள்ளன.
- சிட்டுக்குருவியின் ஆயுட்காலம் 12 ஆண்டுகள்
- ஹம்மிங் பறவை நொடிக்கு 70 முறை சிறகடிக்கும்
- சிகி என அழைக்கப்படும் பறவை மயில்
- இரண்டு கூடுகள் கட்டி வாழும் பறவை தங்கக் கழுகு.
- புறா மணிக்கு 72 கி.மீ. வேகத்தில் பறக்கும்.
- கிவி பறவையின் உயரம் 25 செ.மீ ஆகும்.

*-K.R.K.Ravi Asir*

அவளுடைய தைரியம் அற்றுப்போனது. 'உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்' என்று கூறினாள். மேலும், தானும் தன்னுடைய குடும்பத்தாரையும் அழிவுக்குத் தப்புவித்துக்கொள்ளும்படிக்கு வேவுகாரரை நோக்கி: "நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும், என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத் தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்கவேண்டும்' (யோசு.2:13) என்று கேட்டுக்கொண்டு தன்னையும் தன் வீட்டாரையும் தப்புவித்துக் கொண்டாள். ஆம், இந்த லீதியாளும் கூட தன் வீட்டாரோடு நித்திய அழிவுக்குத் தப்பித்துக் கொள்ளும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். நாமும் இவ்வுலகத்தின் பாவங்களினின்றும், வரப்போகும் நித்திய ஆக்கினையினின்றும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்படி தேவ நியதிகளை நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அடுத்ததாக, இந்த லீதியாள் தேவனுடைய ஊழியர்களாகிய பவுலையும், சீலாவையும் நோக்கி, நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று வருந்திக்கேட்டுக் கொண்டாள் (அப்.16:15) என வாசிக்கிறோம். அன்பு சகோதரியே, கர்த்தருடைய பணியைச் செய்யும் ஊழியர்களை உங்கள் இல்லங்களில் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அல்லது உங்களுடைய பெரிய பங்களாவிற்கு முன்பாக நாய் ஒன்றை கட்டிப்போட்டு ஒருவரும் உங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்கவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தருடைய பணியைச் செய்கிற எளிமையான ஊழியர்கள் தேவனுடைய பார்வையில் மேன்மையானவர்கள். இவ்வுலகின் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவரிலும் மேலானவர்கள். தேவனுக்குச் சேவை செய்கிறவர்கள். ஆம்! சூனேம் என்ற ஊரிலிருந்த ஒரு கனம் பொருந்திய ஸ்திரீ தேவனுடைய மனுஷனாகிய எலிசாவுக்கு தன்னுடைய மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும் குத்துவிளக்கையும் வைத்து தேவனுடைய ஊழியரை தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டாள். அதனிமித்தம் தேவன் அவளை ஆசீர்வதித்து, பிள்ளை இல்லாதிருந்த அவளுக்குக் கர்ப்பத்தின் கனியைக் கொடுத்தார் (2இரா.4:8-17). அன்பு சகோதரியே, இயேசு "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.10:42). அநேகர் தேவ ஊழியர்களைக் குறித்து தவறான எண்ணங் கொண்டவர்களாய் அவருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்துவதில்லை 'உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான்' ரோம.13:4 என்ற வசனத்தை மறந்து போகக்கூடாது.

அன்பு சகோதரியே, லீதியாளைப் பற்றிய இந்தப் பாடத்திலே, நாம் அறியவேண்டியவை: அவள் ஐரோப்பாவில் முதலாவது கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து தன் குடும்பத்தாரோடு இரட்சிக்கப்பட்டாள். அத்தேசத்தில் சுவிசேஷம் பரவ உதவினாள். அவள் தன் பாரம்பரியத்தைப் பாராமல் தேவனுடைய வசனம் கிடைத்தவுடன் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டாள், பிறகு தாமதமில்லாமல் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து தான் மட்டுமல்லாது தன் வீட்டாரோடுங்கூட ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். கடைசியாக தேவஊழியரை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள். இவளுடைய குணங்கள் இவளுக்கு விசேஷித்த மேன்மையைக் கொண்டுவருமல்லவா? நாமும் இவளைப் போல தேவனுடைய விருப்பத்தைச் செய்து விசேஷித்த மேன்மையான நித்திய ஜீவனைப் பெற தேவன் தாமே உதவி செய்வாராக!



பிட்குதல்" என்ற வார்த்தைகளை, வாரந்தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி சபை அநுஷ்டிக்கிறவற்றோடு ஒப்பிட்டு அங்கிகரித்துக் கொள்கின்றனர். கிறிஸ்து இராப்போஜனத்தைத் துவக்கினபோது, தம்மை நினைவுகூரும்படி தம்முடைய சீஷர்கள் இனி வரக்கூடிய நாட்களில் கூடிவரும்போது அவர்கள் மத்தியில் அவர் இருப்பார் என்று அவர் கூறியதையும் நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். இன்னொரு சமயத்தில் இரண்டு அல்லது மூன்று பேராவது தம்முடைய நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் இருப்பார் எனச் சொன்னார் (மத்.18:20).

பவுல் கிறிஸ்தவர்கள் கூடிவந்திருந்த இடத்தில் வாரத்தின் முதல்நாளில் கலந்து கொண்டார் என்பதையும் தயவுசெய்து கவனியுங்கள். வாரத்தின் எந்த முதல் நாள்? ஒவ்வொருவாரத்தின் முதல் நாளில் கூடினார்கள்,மேலும் உடனுக்குடன் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படியாகவும் கிறிஸ்துவின் இராப்போஜனபந்தியை நினைவு கூரும்படியாகவும் கூடிவந்தார்கள். பழைய ஏற்பாட்டின் கீழ் தேவனுடைய ஜனங்கள் ஏழாம்நாளை நினைவுகூரும்படி கட்டளை பெற்றிருந்தனர், ஆனால் எந்த ஏழாம் நாள்? ஒவ்வொரு ஏழாம் நாள். அந்தப்படியே கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் பங்குகொள்ளவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பவுல் 1கொ. 1-ம் அதிகாரத்தில் சபை அங்கத்தினர்களில் சிலர் எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனத்தை அசட்டை பண்ணினார்கள் என்பது குறித்து பேசுகிறார். அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை சாதாரணமான தங்களுடைய சொந்த போஜனத்திற்கு மாற்றினார்கள். இது தவறானது. பவுல் அவர்களுக்கு அவர்களுடைய சொந்த போஜனத்தைப் புசிக்க அவர்கள் சொந்த வீடுகளைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் ஆராதிக்கக்கூடி வரும்போது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் நினைவுகூருதலாக அப்பம் பிட்கும்படிக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணும்படிக்கும் கூடிவரவேண்டும், தங்களுடைய வயிறுகளை நிரப்ப சொந்த போஜனத்தைப் புசிக்க அல்ல என்று சொன்னார்.

மேலும், பவுல் "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்

பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்'' (1கொரி.11:23-29) என தொடர்ந்து கூறினார்.

கொரிந்து சபை கிறிஸ்தவர்கள் இவ்வாறாக நினைவுறுத்தப் பட்டார்கள், நாமும் அவ்விதமாக, கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் பங்கெடுக்கும் போது நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமில்லாதவனாக இருந்தால், அவன் தேவனிடத்தில் மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பைப் பெற வேண்டியது அவசியம். பாவம் வெளிப்படையாக இருக்குமானால் அவன் சபையாருக்கு முன்பாக, மனந்திரும்புதலை வெளிப்படுத்தும்படிக்கும், தன்னுடைய குற்றங்களை அறிக்கையிடும்படிக்கும், தன்னுடைய சகோதரரிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதற்கும் செல்ல வேண்டியது அவசியம். விசுவாசமுள்ளவராக, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பியவராக, மன்னிப்புக்கேட்டவராக இருக்கிறவர்கள் இராபோஜனத்தில் பங்குகொள்ள பாத்திரவான்களாக இருக்கிறார்கள். ஒருவன் தன்னை சோதித்தறிந்து, தன்னை சரிசெய்து கொள்ளாமல் இருந்தால், அவன் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமைக் குறைச்சலை கொண்டு வருகிறவனாகவும் தன்னை தண்டனைக்கு உட்படுத்துகிறவனாகவுமிருக்கிறான்.

நீங்கள். கிறிஸ்தவர்களா, கிறிஸ்துவின் சபை அங்கத்தினரா? அப்படியிருப்பீர்களென்றால், பின்பு ஆராதிக்கும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு, அவர் உனக்காகவும் உன்னுடைய இரட்சிப்பிற்காகவும் அவரையும் அவர் செய்து முடித்தவற்றையும் நினைவுகூரும் நோக்கத்திற்காக அசட்டைசெய்யாதபடி மிகுந்த பயத்தோடு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடி வரவேண்டும். இந்த வழிபாடு கர்த்தருக்கு கனத்தையும் மகிமையையும் கொண்டுவருகிறது. மேலும் அவரிடத்தில் கொண்ட விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படிக்கு உங்களுக்கு பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.

❒ மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டு நவம்பர் 1 ம் தேதி தமிழ்நாடு நாளாக அநுசரிக்கப்படுகிறது.

❒ ஜம்மு – காஷ்மீரில் அமலில் உள்ள கட்டுப்பாடுகள், குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று மாநில நிர்வாகத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

❒ தமிழகத்தின் கீழடியில் 5–வது கட்ட அகழ்வாய்வு பணிகள் முடிவுற்றுள்ள நிலையில், 6–வது கட்ட அகழ்வாய்வுப் பணிக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

**நடப்புச்செய்திகள்**


**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** *Contact Us: 94435 58041*
*6379350509*



பெண்கள் பகுதி

## விசேஷித்த மேன்மை
## Special Distinction

*-Glory Arjunan*



ஓரிரு மாதங்களுக்கு முன்பாக விசேஷித்த மேன்மைக்குரிய சில ஸ்திரீகளைக் குறித்து பார்த்தோம். இப்போதும் கூட விசேஷித்த மேன்மைக்குரிய மற்றொரு ஸ்திரீயைக் குறித்துப் பார்ப்போம்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவ ஊழியர்களாகிய பவுல், சீலா போன்றோரை ஐரோப்பாவில் முதலாவது ஏற்றுக்கொண்டவளாகக் கருதப்பட்டவள் லீதியாள். அன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சீஷர்கள் ஒவ்வொரு தேசமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தை, அதாவது அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பற்றி பிரசங்கித்துக் கொண்டு வந்தார்கள். "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்'' (அப்.16:14). இந்த ஸ்திரீ முன்னமே தேவனை வணங்குகிறவளாயிருந்தாள். ஆனாலும் பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார் என வாசிக்கிறோம். அப்படியானால், அவள் தேவனை வணங்குகிறவளாயிருந்தாலும் தேவனுடைய சித்தம் செய்ய அறியாதவளாயிருந்தாள் என்று தான் பொருள். எப்படியெனில் கர்த்தருடைய வசனத்திற்குச் செவிசாய்த்து பின்பு அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் என்று வசனம் 15-ல் வாசிக்கிறோம். நான் தேவனை வணங்குகிறவள், எனக்கு எல்லாமே தெரியும் என்று சொல்லி அவள் அத்தோடு நின்றுவிடவில்லை, தேவன் அவள் இருதயத்தைத் திறந்தபோது அதைக் கடினப்படுத்தாதபடி பவுல் கூறின தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீங்கள் ஒருவேளை தேவனை வணங்குகிறவர்களாயிருக்கலாம், இருந்தபோதிலும் தேவனுடைய சித்தத்தின்படி நீங்கள் இரட்சிக்கப்பட "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' என்ற மாற்கு 16:16-ம் வசனத்திற்கேற்ப ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதையறியாத அநேகர், நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள், நாங்கள் தேவனைத் தான் வணங்குகிறோம், எங்களுடைய மூதாதையர் எல்லாரும் சபையில் குருமார்களாகவும், உபதேசிகளாகவும் இருந்தார்கள் என்று சொல்லி தேவனுடைய சித்தம் அறியாதவர்களாகவே கடைசி வரை ஜீவித்து மரித்துப் போய்விடுகின்றனர். ஆனால், தேவனுடைய வசனம் நம்மை நியாயந்தீர்க்கிறதாக இருக்கிறது என்பதை மறந்து போகக்கூடாது.

பாருங்கள், அப்.16:14-15-ம் வசனங்களிலிருந்து இன்னும் இரண்டு பாடங்களைக் கற்றுக் கொள்ள முடிகிறது. வசனம் 15-ல் 'அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு' என வாசிக்கிறோம். இது பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஒரு ஞானமுள்ள ஸ்திரீயாகிய ராகாபை எனக்கு நினைவுப்படுத்துகிறது. இந்த ராகாப் கர்த்தருடைய வல்லமையை அறிந்திருந்தாள் (யோசுவா.2:10,11). கர்த்தருடைய மகத்துவங்களைக் கண்டு அவளுடைய இருதயம் நடுக்கம் கொண்டு கரைந்துபோனது.

சோர்ந்து போய் கொண்டிருக்கிறேன். கால அட்டவணையை வைத்துக்கொண்டிருக்க வேண்டியது, சவால்கள், செலுத்தவேண்டிய ரசீதுகள். நான் பிடித்துக் கொள்வது ஒருபோதும் முடியாதது, கூடுதல் நேரத்தை ஒருபோதும் பெற்றிருக்காதது அல்லது பணம்; ஒவ்வொன்றும் சரியான போராட்டம் போல் காண்கிறேன்".

**அனிதா புன்முறுவல்செய்தாள்:** சில நேரங்களில் நான் நினைக்கிறேன், நான் மிகவும் சோர்வாக இருப்பதைப் போலவும், இதைவிட்டு நான் உடனே வெளிவர முடியுமென நான் விரும்புகிறேன்", ஆனால் பின்பு என் குடும்பத்தில் மிக மோசமான நிலையில் வியாதியுள்ள சிலரை கவனிக்கவேண்டும், அல்லது எனது கணவர் வெளியூர் சென்றுள்ளார், அல்லது மகனை அல்லது மகளை பயங்கரமான நிலையில் என் குடும்பங்களில் இழந்திருக்கிறேன் அல்லது எங்கள் குடும்பங்கள் தேவனை விட்டு விலகிப் போயிருக்கிற குழந்தைகள் அல்லது இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்கின்றனர் அதன்பின் நான் இவ்வூழியத்தை எவ்வளவு சந்தோஷமாக செய்யவேண்டியவளாய் இருக்க வேண்டும் என நான் அறிகிறேன், எனக்கு எந்த ஒரு உண்மையான பிரச்சனை அல்லது வாழ்வதற்கான பெரிய கவலை ஒன்றையும் கொண்டவளாயிருக்கவில்லை ஆகவே கவலைப்படுவதின் மூலமும் சிறிய காரியங்களைக் குறித்து புகார் செய்து கொள்வதின் மூலமும் எனது சொந்த கஷ்டத்தின் சூழலை உருவாக்குகிறேன். அதன் பின் அது எவ்வளவு சிறிய விஷயம் என வெட்கப்பட்டேன். நான் பெற்றுள்ள எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களை உணர்ந்து பார்க்க உதவும்படி தேவனை நோக்கி ஜெபிக்கிறேன், அதற்குமுன் நான் என்னுடைய மனோநிலையினிமித்தம் இவைகளை இழந்திருக்கக் கூடும்.

நீங்கள் முற்றிலும் எதிர்மறையான மனோபாவத்தையும் ஒரே சூழ்நிலை விளைவின் பயனைப் பிறப்பித்ததையும் இது வாழ்க்கை முறையில் விளக்கப்பட்டுள்ளதை பார்த்தீர்களா? இல்லை, இது உண்மையான சந்தர்ப்பம் அல்ல அல்லது பயங்கரமானது அல்லது நல்ல சமயங்கள் அல்லது அவைகளின் இழப்பு இவைகளெல்லாம் நம்முடைய வாழ்வை வடிவமைக்கிறது இது நமது வழியில் வருகிற ஒவ்வொரு நிகழ்வுக்குமான நேரடியான பதிலில் நம்முடைய சொந்த மனோபாவம் உள்ளது. நாம், நாமே இது ஆசீர்வாதமாக இருக்கும் அல்லது சாபமாக இருக்கும். நாம் வளர்ச்சியடைவோம் அல்லது இதனால் வறண்டு போய்விடுவோம் என தீர்மானிக்கிறோம்.

**மோசே சொன்னார்:** "இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன், இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந் தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டால்.... சாபமும் வரும்" (உபா.11:26,27) என்றார்.

கற்பனைகள் எல்லா ஜனங்களுக்கும் ஒரேமாதிரியாக இருந்தது; ஆசீர்வாதம் ஒருவர் வாழ்விலும் சாபம் இன்னொருவர் வாழ்விலும் இருந்த இந்த வித்தியாசம் கற்பனைகளுக்கு அவர்களுடைய பிரதிக்கிரியையாக இருந்தது.

**பவுல் சொன்னார்:** "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம்" (2கொரி.2:16).

கிறிஸ்தவனும் அவனுடைய செய்தியும் பலவருடங்களாக ஒரே விதமாக நிலைத்திருக்கிறது வேறுபட்ட செய்தியை கேள்விப்படுகிறவர்களில் மட்டுமே இருக்கிறது நாம் நாம் ஒவ்வொருவரும், நாம் எப்படி கேள்விப்படுகிறோம், நாம் எப்படி பதிலளிக்கிறோம் என்பனவற்றில் கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய மனோநிலைகள் பரலோகத்திற்கு அனுப்பப்படும் அல்லது நரகத்திற்கு அனுப்பப்படும். நாம் அவர்கள் மேலும் நம்முடைய பாதுகாப்பில் மிக ஜாக்கிரதையாக இருக்கமுடியாது.



**நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்**

Evangelizing Our Friends



## ஊழியப்பிரயாணம் செல்லுதல் நம்முடைய நண்பர்களுக்கு உதவுகிறது

Going on a Mission Trip Helps our Friends

**பாடம் -10** -TVOTI

**மனப்பாட வசனம்: (அப்.1:8)**

"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்"

முன்னுரை;

நீங்கள் எப்போதாவது விடுமுறை நாட்களை அநுபவித்தது உண்டா? இதற்கு முன் நீங்கள் கண்டிராத சில இடங்களுக்குச் செல்வது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். நீங்கள் புதிய ஜனங்களை சந்திக்கவும், புதிய இடங்களைப் பார்க்கவும் வேறுபட்ட கலாச்சாரங்களைப் பற்றி கற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பத்தைப் பெறுவீர்கள். சில நேரங்களில் இந்த பிரயாணம் நாட்டில் இன்னொரு பகுதிக்கும் சில சமயங்களில் முழுவதும் வித்தியாசமான நாட்டிற்கும் கொண்டு செல்லும்.

மேலும் நீங்கள் பயணம் செய்து, அதிகமான விசித்திர பொருட்களைக் கண்டு, மிக ஆர்வத்துடன் பயணம் மேற்கொள்ளவும், உலகத்திலுள்ள பல்வேறு கலாச்சாரங்களைக் காணவும் செய்வீர்கள். பிரயாணத்தை முடித்து திரும்பி வரும்போது உங்களுடைய அநுபங்களைக் குறித்து சொல்லுவதற்கு பல கதைகளைக் கொண்டிருப்பீர்கள். ஜனங்கள் எப்போதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தீர்களா என்றும் உங்களுடைய வழக்கத்திற்கு மாறான மகிழ்ச்சியூட்டும் அல்லது கிளர்ச்சியூட்டும் நிகழ்வினைக் குறித்து கேள்விப்பட விரும்புவார்கள். இது மற்றவர்களோடு உறவுமுறையினையும் பரஸ்பர நேச உணர்வினையும் மேம்படுத்துகிறது. இப்போது, சபையிலிருந்து ஒரு குழுவுடன் இணைந்து ஊழியப்பிரயாணத்தை மேற்கொள்ளும் வாய்ப்பினைப் பற்றி நினைத்து மற்றவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய பல சந்தர்ப்பங்களை இது உருவாக்கும் என்பதை கருத்தில் கொள்ளுங்கள். ஊழியப் பிரயாணத்தில் பங்கு கொள்வதென்பது எப்பேர்பட்ட அற்புதமான ஆசீர்வாதம்!

**வேதாகமம் இதுகுறித்து என்ன கூறுகிறது?**

இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் பல்வேறு இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று சொன்னார். எப்போதும் தம்முடைய **சீஷர்கள் போய் உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைச் சொல்ல வேண்டுமென்பது** அவரது நோக்கமாக இருந்தது. அப்.1:8ல் அவர், **"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதோ முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்"**

எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும் எங்கும் தம்முடைய சீஷர்கள் செல்ல வேண்டுமென விரும்பினார். மத்.28:19 ல், ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று இயேசு சொன்னார். அவர் மேலும், "...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்.16:15) என்றார். ஆதி கிறிஸ்தவர்களாக பல வேறுபட்ட ஜனங்களையும், இடங்களையும் கலாச்சாரங்களையும் கண்டு அநுபவித்ததைப் பற்றி நினைத்துப் பாருங்கள்! – **தொடரும்**

பெண்கள் பகுதி



# மனோநிலைகள்
# Attitudes

*-Betty*

மனோநிலைகள்... நாம் நம்முடைய ஒரு பகுதியை தீர்மானிக்க நாம் இந்த மனோநிலையை அடக்கியாள்வோமானால்,நம்முடைய நாட்களில் மற்றும் வருடங்களில் எப்பேர்பட்ட மிகப்பெரிய கட்டுபாடாக இருக்கும். நம்முடைய இருதயத்தில் திடனாய் பதியவைத்துக் கொள்வதற்கும், நம்முடையவற்றை நினைவுப்படுத்திக் கொள்வதற்கும் அதிகமதிகமாக, வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் நாம் சமாளித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கவும் இது எத்தகைய உண்மை!

கிறிஸ்தவர்கள் கூட காரியங்களை வெவ்வேறாக மதிப்பிடுகின்றனர் ஏனென்றால் வெவ்வேறான மனோநிலைகள்! சூழ்நிலைகளுக்கு வேறுபட்ட பதில்களையும் அதன் விளைவின் பயன்களையும் பாருங்கள்:

**சபையின் வழக்கமான பாட்டுத் தலைவர் தொலைவில் இருந்தார், எனவே ஒரு மாற்று நபர் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருந்தது.**

**ஜார்ஜ்:** குறும்பாக, "நான் இது குறித்து கவலைப்படவில்லை, மேரி, இன்று காலை நான் பாடலை நடத்தவிருக்கிறேன். ஏன் அவர்கள் மற்றவர்கள் எவரையும் பாட்டு நடத்தும்படி கேட்டுக்கொள்ளவில்லை?"

புன்முறுவலுடன், ஒரு அசைவு: "வா ஆன்", ஆராதனைக்காக பாடல்களைத் தெரிந்தெடுக்க உதவிசெய். அவர்கள் டாம் தொலைவிலிருப்பதால் நாம் அந்த இடத்தை நிறைவு செய்யும்படி விரும்புகிறார்கள்!"

**ஒரு சிறுவர்களின் வகுப்பிற்கு ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டது.**

**பார்பரா:** "ஓ, மாட்டேன் நீ செய்யமாட்டாயா! நான் பண்படாத சிறுபிள்ளைகள் கூட்டத்திற்கு கற்றுக் கொடுக்கப்போகிறேன்"

**ஜேன்:** இந்த வயது சிறுபிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க எனக்கு விருப்பம். அவர்கள் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் போதிய தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள், எனவே அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க பல வழிமுறைகள் உள்ளன. மேலும் இந்த வயது கற்றுக்கொள்ள மிக ஆயத்தமுள்ள வயது!

**போதகர் விடுமுறையில் இரண்டு வாரத்திற்கு தொலைவில் இருந்தார்.**

**ஜான்:** "எனக்குத் தெரியவில்லை ஏன் எப்போதும் எல்லாரும் கூடுதல் வேலைகள் எல்லாவற்றையும் என்மேலே திணிக்கிறார்கள்". ஏன் மற்ற சில மனிதர்களால் ஏதாவது சில பொறுப்புகளை செய்யமுடிவதில்லை?"

**சார்லஸ்:** "கண்டிப்பாக, ஜிம்முக்காக நான் செய்வேன். என்னுடைய முன்னேற்றத்திற்காக ஒரு சிறிய வேலையைக் கூட்டிக் கொள்வது எனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். இப்போது நான் பேசுவதற்கான சந்தர்ப்பத்தின் பயனைப் பெறுவேனென்றால், தேவன் நிச்சயமாக ஊழியத்தின் மற்ற கதவுகளை எனக்காக மென்மேலும் திறப்பார்".

**கர்த்தருடைய பந்திக்கான முக்கியத்துவத்துக்கும் கட்டிடத்திற்காகவும் ஒரு புதிய பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கிறது**

மேரி: "நல்லது, அந்தக் கட்டடத்தினுடைய இப்படிப்பட்ட போஜனத்தைத் அவர்கள் தயாரிக்கும்போது, அந்த பாத்திரத்தை சுத்தம்செய்யமாட்டேன் என நினைக்கத் தேவையில்லை. மேலும் மற்ற யாராவது பந்தியை தயார் செய்யட்டும். எனக்கு அப்பம் எப்படி செய்யவேண்டுமென தெரியாது மேலும் எப்படியோ, நான் பார்க்கவில்லை ஏன் நாம் அதைச் செய்யவேண்டியிருக்கிறது".



**ஆன்:** இந்தமாதம் ஒருவர்கூட சபைக் கட்டிடத்தை சுத்தம் செய்யவில்லையென்றால், நாங்கள் செய்கிறோம். சிலசமயங்களில் கவனக்குறைவாக அதை அழுக்குப்படுத்துகிற மனிதர்கள் இருந்த போதிலும், இது தேவனை ஆராதிப்பதற்கென்று தனியாக அமைக்கப்பட்ட கட்டிடம், எனவே மிகவும் சிறப்பான வழியில், இது தேவனுடைய வீடு என நினைத்து சுத்தம் செய்யமுடியும் என்ற நினைவு எனக்குப் பிடிக்கும். மேலும் நான் பந்தியை ஆயத்தப்படுத்துவதிலும் விருப்பப்படுகிறேன். மனிதனுடைய கரங்களால் அவைகளை சுத்தம் செய்யாமலும் அவற்றை ஆயத்தப்படுத்தாமலும் இயேசுவின் மரணத்தின் நினைவுகூருதலானதை தொடரமுடியாது. ஆராதனையின் எனது சொந்த தனிப்பட்ட நேரத்தைக் கொண்டிருக்கிறேன் மேலும் நாம் பந்தி பாத்திரங்களின் மேல் நான் அக்கறைக் கொண்டிருக்கும்போது நான் என்னையே தேவனுக்குக் கொடுக்கிறேன் மேலும் சிறப்பாக அப்பம் செய்வதிலும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறேன். இது மாவையும் எண்ணெயையும் எடுத்துவைக்க என்னை நல்லுணர்வுள்ளவளாக்குகிறது அத்துடன் புதிதாக மற்றும் அன்புடன் சபை தொழுகையில் உயர்ந்த நிலைக்கென அப்பம் தயார் செய்வதற்கு என் திறமையை சிறப்பானதாக மாற்றும் உணர்வையும் எனக்கு ஏற்படுத்துகிறது.

**ஒருவர் வீட்டு வேதாகம கற்றலுக்கு வேதாகம அஞ்சல் முறை பாடத்தினை எடுக்கும்படி அழைக்கப்பட்டிருந்தார்:**

**ஜேம்ஸ்:** "நல்லது, அங்கே நான் செல்ல எனக்கு நேரம் இருக்காது என்று அவர்கள் நினைக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். என்னுடைய எல்லா அதிகப்படியான நேரம் பயிற்சி செய்வதிலும் சபை பந்து விளையாட்டுக் குழுவிலும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மூப்பர்கள் பாடம் எடுப்பதில் ஒருவராக இருக்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இது தவிர, இந்த வாக்கர் என்பவரை எவ்வகையிலும் எனக்குத் தெரியாது அவர் உண்மையிலே எதிர்பார்க்கக் கூடிய ஆர்வமுள்ளவர் அல்ல மேலும் அதிகமான சிறு சிறு பிரயாணங்களில் நேரம் வீணடிக்கப்படும்..."

**சாம்:** இந்த மனிதனை சந்திக்கும்படி அவர்கள் எனக்கு இவரைக் கொடுத்ததினால் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உண்மையாகவே கற்றுக்கொள்ள விரும்புகிற யாரோ ஒருவரை கண்டுகொள்வது எப்பேர்பட்ட ஆச்சரியம்! நான் இப்போதே என்னை அறிமுகப்படுத்திக் கொள்ள அவரை அழைத்து எப்போது முதல் வகுப்பை ஒழுங்கு செய்யலாம் என அவரை பார்த்து கேட்பேன். அத்தோடுகூட சத்தியத்தைக் கற்றுக் கொள்வதில், அவர்களோடே படித்துக் கொள்வதிலும் வாக்கருடைய சந்தர்ப்பம் ஜோனுக்கும் மேலும் எங்களுடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சியில் எனக்கும் நன்றாக இருக்கும்....

**வியாதியுடன் இருப்பதாக கூறின கிறிஸ்தவர்களைச் சந்திக்க தானாக முன்வருபவர்கள் அழைக்கப்பட்டனர்:**

**டாம்:** வேண்டாம், என்னை அழைக்காதீர்கள் எனக்கு என்ன சொல்லுவதென்று தெரியாது. மேலும், நோய் என்னை சோர்வடையப்பண்ணுகிறது"

**ஸ்காட்:** நான் போகிறேன். ஒருவேளை என்னால் சில உதவி செய்யமுடியும். வியாதியஸ்தர்களைப் பார்ப்பதினால் என்னுடைய உடல் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது என்று நான் எவ்வளவு நன்றியுள்ளவனாயிருப்பது எத்தனை அவசியம் என என்னை அதிகமாக நினைவு படுத்துகிறது மேலும் படுக்கையில் படுத்துக் கொண்டு, வேதனையை அநுபவித்துக் கொண்டு, யாராவது வந்து போதுமான அளவு பராமரிப்பார்களென்றால் அது ஆச்சரியமாயிருக்கும் என்பவர்களை பார்க்கவேண்டியது என்னுடைய வேலையாயிருக்கிறது"

**வாழ்வினாலும் சாவால்களினாலும் களைப்பு**

**பெத் கேள்விப்பட்டதை குறிப்பிடுகிறாள்:** "நான் ஒவ்வொன்றினாலும் மிகவும்